உ

கடவுள் துணை.

மதுரை

# மீனாட்சியம்மை பேரில்

## அகவல்.

இஃது

சரவணபுரம்.

சண்முகமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு.

புரசபாக்கம்

ஏழுமலைப்பிள்ளையவர்களது

விவேகவிளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

பவ௵ மார்கழி௴.

உ

சிவமயம்.

# மீனாட்சியம்மைபேரில்

## அகவல்.

பங்கயத்திருவே பார்வதியுமையே
செங்கண்மால்தங்கை தேவிமீனாட்சி
இங்கிதப்பொருளே யேந்திழையாளே
மங்களநிறைந்த மாதங்கிதேவி
பராபரமான பரஞ்சுடர்விளக்கே
தராதலம்படைத்து தானெழுந்தருளி
நிராதரமாக நினைவிலிருந்து
புராதனமாகப் புத்தியிலிருத்தி
முக்கோணத்தின் முறைதனைப்பயிற்றி
சட்கோணத்தின் றகைதனைக்காட்டி
ஐங்கோணத்தின் அறிவெனக்கோதி
லிங்கவுருவத் துடனின்றதேவி
தாயைப்போலத் தயவாய்வளர்த்து
வாயைத்திறந்து வாவென்றழைத்து
குருமொழிஞானக் குவலயங்காட்டி
திருவருள்வைத்துத் தெரிசனங்கொடுத்து
பஞ்சாட்சரத்தின் பதிவினையுரைத்து
நெஞ்சிற்றரிக்க நினைவையுங்கொடுத்து

நாட்சியட்டாக்ஷர வகையெனக்கோதி
சூட்சாட்சரத்தின் சுருக்கமறிவித்
தேகாட்சரத்தி னிலையறிவித்தே
ஆகாவுள்ள மயக்கமஃதருதி
வேகாக்கருவி வியர்வையுந்தவிர்த்து
சாகாமருந்து தன்னையுந்தந்து
போதமொழுக்கம் பொறுமையளித்த
மாதுமையான மதுரைமீனாட்சி
சத்திமுத்தி சட்கோணத்தி
சித்திவெற்றி சிவபரஞ்சோதி
சூலிகபாலி சூத்திரப்பொருளே
வேலனையீன்ற விளக்கொளியாளே
அவ்வும்சவ்வு மானவுபனமே
மவ்வும்வவ்வும் வளர்ந்தெழுங்கொழுந்தே
ஓம்நமோவென்று முற்பனப்பொருளே
ஆமாயென்ன வமர்ந்திருந்தவளே
புல்லரிடத்திற் பொருந்தாதவளே
வல்லமைசொல்வோர் வாய்கிழிப்பவளே
பச்சடுக்குற்றுப் பகைத்துவந்தபேனை
நச்சுவேலால் நாக்கைப்பிடுங்குவாய்
சக்கரவித்தை சடாங்குற்றபேனை
சிக்கெனப்பிடித்து சிந்தைகலக்குவாய்
விடப்பிலவித்தையப் பில்லிவிட்டவனை
துடித்திடவுதைத்துத் தொலைத்திடுந்தாயே
துலுக்கர்மந்திரமும் தொட்டியவித்தையும்

மனுக்கரோதும் மலையாளவித்தையும்
கற்றுவந்தபேரை கர்ப்பக்சழித்து
பற்றிப்புடைத்து பாய்க்கிடைசெய்வாய்
உன்றனைநம்பினே னுன்னுடையடியனேன்
தந்தைதாய்நீயே தயையுடன்காப்பாய்
வீரமல்லாரி விக்ரமசூலி
சூரசம்மாரி துர்க்கிசாமுண்டி
பத்ரகாளி பராபரஞ்சோதி
சித்திரமதுரைச் சிங்காரவல்லி
மாயேஸ்வரியே மனோன்மணியம்மையே
தாயேஉமையே சங்கரிகெவுரி
மார்க்கண்டனுக்கு வயதுபதினாறு
தீர்க்கமாயளித்தோன் தேவிபராபரி
யக்குவடத்தி யனேகமாய்ப்பூண்டு
கொக்கிறகணிந்த கோலாகலியே
என்னுடனெதிர்த் தேவல்செய்வோரை
சின்னாபின்னமாய் சிதறவடிப்பாய்
அங்கயற்கண்ணி யானந்தக்கூத்தாள்
பங்கிலமர்ந்த பசும்பொற்கிளியே
கக்கிஷமாகக் ககனக்கூத்தாடி
சொக்கனாச்சேர்ந்த மிக்கசுந்தரியே
யானைத்தோலை யழகுடனபோர்த்து
மானைப்பிடித்த வரதன்மகிழ்கொள்
சப்பாணியாக சந்தியிலிருக்கும்
தொப்பைவயிற்றனைச் சுகமாய்பெற்றாய்

மயின்மிசையேறி வள்ளியைப்புணர்ந்த
அயில்வேலேந்தி யன்புடனின்றாய்
பாத்திரமேந்தி பலிதானெடுத்து
கூத்தையுதைத்தோன் கொஞ்சுங்கிளியே
ஆத்திரமாக வந்தளித்திட்டு
நியதுரமாக நீயெனைக்காப்பாய்
வாழ்வும்வறுமையி லினிப்படமாட்டேன்
பேர்வரும்பொருளும் பெட்பும்புத்தியும்
அன்னமும்சொன்னமும் ஆடையுமுதவி
என்னைநீகாக்க விதுகடனுனக்கே
பெற்றாய்நீயே பிள்ளைநானுனக்கே
மற்றொருதவி வையகத்தில்லை
மோசங்கள்செய்யு மோகினிப்பேயை
நாசஞ்செய்யு நாராயணியே
காமனையெரித்த கனற்கண்ணாளே
வாமபாகத்தின் மகிழ்ந்தணைந்தவளே
அவ்வுங்கிலியுமா யமர்ந்தவானந்தி
சவ்வுங்கிலியும் தானெழுந்தவளே
வொன்பதுகிரகமு முடன்பகைத்தாலும்
அன்புடனோகக் தருள்புரிபவளே
ஒட்டச்சியா கியோங்குமம்மனையே
செட்டிச்சியான சீர்பதத்தாளே
வேடிச்சியென்று மேன்மைபெற்றவளே
ஆடிச்சிவன்பதத் தன்புபெற்றவளே
கொன்றைசூடுங் கோமான்புல்ல

நன்குடன்சேரு நாயகிபாளே
எந்தவினையு மிடரும்வந்தாலும்
உன்றனைத்துதிப்பவர்க் கோருகுறைவிலனால்
வெட்டுணிகுட்டுணி வீரனும்சூரனும்
துட்டவிருளனும் சுடுகாட்டேரியும்
மசானருத்திரனும் வாய்கொள்ளிபேயும்
ஈசானத்துறையும் கனபூதவீரனும்
ஏவலுக்கிசைந்த விரத்தகாட்டேரியும்
நாவதுகுளறி நடுங்கவேபண்ணி
என்வார்த்தைகேட்டு எனதேவல்செய்து
என் வசமாகி இருந்துரட்சிப்பாய்
விடத்தினாவும் வெற்றியகாயமும்
இடபமும்புலியு மெதிர்ப்படும்பாச்சலும்
உன்னுடையகவ லொருபொழுதோதக
மின்னொளிபோல்விட் டோடவேபண்ணுவாய்
கன்னிக்கிரந்தி கடியகாமாலை
மன்னியசோகை மருத்துருகுட்டம்
குத்தும்சூலை கொடிதானபித்தம்
சற்றுன்பேர்சொல தரணிமுன்பனிபோல்
சீக்கிரமாகத் தெறித்திடப்பார்த்திட்
டாக்கிரம்செய்து அகட்டிநீயோட்டு
மாலுகந்தோது மதோன்மத்தகியே
காலன்வந்தால் கடிந்துதைந்துருட்டு
பூவினிலுறையும் பொன்னேமின்னே
தேவர்கள்பணியும் சிவசிற்சத்தியே

# மீனாட்சியம்மை அகவல்.

பூகவசியமும் புவியிலேவிசையமும்
நாதன்கிருபையும் வசீகரம்நல்கி
பாசவினையின் பந்தமகற்றி
ராஜவசிகரந் தந்தருளம்மணி
சிறுத்தொண்டன்பிள்ளை சீராளன்றன்னை
அறுத்துண்டவரை யணைந்தவானந்தி
அஞ்ஞானத்தை யகலத்துரத்தி
மெய்ஞ்ஞானத்தை விளங்கப்பண்ணும்
பாடப்படிக்கப் பாவனைசெய்து
நாடவருளு நாவிலுறைந்திருந்
தசதிவராமே யாதீனம்பெருக
இசையுடனிருக்க வெந்தாய்பாரு
விளக்கொளிதனக்குமுன் மின்மினிப்பூசிபோல்
தளதளவெனவே தமிழையுரைத்தேன்
புன்சொலாயினும் போற்றியதாதலின்
இன்சொற்புலவர்க் கிதுபொறுப்பதுகடன்
மீனாட்சிதாசன் விளம்பியவகவல்
தானாட்சியாகத் தான்கேட்டபேர்களும்
வையகமுழுதும் வரிசைபெற்றோங்க
செய்வதுகடனுன் திருவடிசரணம்.

மீனாட்சியம்மை அகவல்

முற்றிற்று.